**MCOP .No. 120/2018**

**Date: 08.12.2023**

**ம.சா.1 ஜீவரத்தினம் த.பெ ஜான் கோயில் ராஜ்**

**வயது22**

**எதிர் மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்தில் இறந்த நபரான பெருங்கோட்டுர் செல்வி உங்களது தாயார் என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனம் உங்கள் தாயார் பெயரில் வாங்கப்பட்ட புதிய வாகனம் என்றால் சரிதான். விபத்து தேதிவரை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்படாமல் இருந்தது என்றால் சரிதான். விபத்து தினமன்று விபத்தின் போது யமகா பேசினோ வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்றால் எனது மாமா சிவசக்திபாண்டியன் ஓட்டினார். மேற்படி சிவசக்திபாண்டியனுக்கு இருசக்கர வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. சிவசக்திபாண்டியனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை எனவும், இவ்வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கீறீர்கள் என்றால் மறுக்கிறேன். உங்களது மாமா வாகனத்தை வேகமாக ஓட்டி சென்ற பொழுது பின்னால் உட்கார்ந்திருந்த உங்களுடைய தாயார் பெருங்கோட்டுர் செல்வி வாகனத்தில் இருந்து தவறிவிழுந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கோரும் இழப்பீடு தொகை அதிகமானது என்று சொன்னால் மறுக்கிறேன். வாகனத்தின் உரிமையாளரான உங்கள் தாயார் இறந்துவிட்ட காரணத்தினால் விபத்திற்கான இழப்பீடு தருவதற்கு காப்பீடு நிறுவனம் பொறுப்பாக மாட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாகனத்தின் உரிமையாளர் வாகனத்தை முறையாக பதிவு செய்யாத காரணத்தினாலும், சாலை அனுமதி பெறாத காரணத்தினாலும் காப்பீடு விதிகளுக்கு மீறாக நடந்த காரணத்தினால் காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் மறுக்கிறேன். உங்கள் மனுவில் சொல்லியுள்ள உங்களுடைய தாயாரின் வருமானம் மிகைப்படுத்தி சொல்லியுள்ளீர்கள் என்றால் மறுக்கிறேன்.

எதிர்மனுதாருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் மறுக்கிறேன்.